பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆடி 11உ (27—7—67) வியாழன் ★ வெளியூர்: ஆடி 12உ (28—7—67) வெள்ளி [இதழ்: 37

ம.பி. அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

போபால், ஜூலை 27—

மத்தியப் பிரதேச காங்கிரசு அமைச்சரவைமீது, நாளை (வெள்ளிக் கிழமை) சட்டமன்றம் கூடும்போது, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர எதிர்க் கட்சியினர் முடிவு செய்திருக்கின்றனர்.

ஆளும் கட்சியான காங்கிரசுக்கு சட்டமன்றத்தில் பெரும்பான்மை இல்லை என்பதாலேயே இத் தீர்மானம் கொண்டுவர முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

சு. ம. திருமண மசோதா

'சிக்கல்'களை ஆராய்கிறதாம் மத்திய அரசு

புதுடில்லி, ஜூலை 26—

"சுயமரியாதைத் திருமணத்தைச் செல்லுபடியாக்கத் தமிழக அரசு கொண்டுவந்துள்ள மசோதா பற்றி மத்திய அரசு ஆராய்ந்து வருகிறது"

என, நாடாளுமன்றத்தில் சட்டத் துணை அமைச்சர் டி.ஆர். சவான் தகவல் தந்தார்.

திருமதி சுசீலாரோகட்கி கேட்ட கேள்விக்குத் துணையமைச்சர் பதிலளித்தார்.

"ஏற்கனவே நடைபெற்றுள்ள சு. ம. திருமணங்களையெல்லாம் செல்லுபடியாக்கக்கூடிய வகையில் தமிழக அரசு கொண்டு வந்திருக்கும் இம்மசோதாவில் உள்ள 'சிக்கல்'களையும், இதனால் ஏற்படக்கூடிய 'விளைவு'களையும் அரசு ஆராய்ந்து வருகிறது" என்றார் அமைச்சர்.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி

சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி, ஜூலை முதல் தேதியுடன் முடிந்த வாரத்தில் ஐந்து புள்ளிகள் உயர்ந்து 708-ல் நின்றது.

பருப்பு, காய்கறிகள், இறைச்சி, புளி, வெள்ளைப்பூண்டு, வெல்லம் இவற்றின் விலை உயர்வே இதற்குக் காரணம்.

காந்தியார் கனவை நனவாக்கும் கழக அமைச்சரவை

ஊதியத்தில் பாதியைக் குறைத்துக் கொண்டு வழிகாட்டினர்

ஒரு மாத ஊதியத்தைத் தீ விபத்து நிவாரணத்துக்கு அளிக்க முடிவு

சென்னை, ஜூலை 27—

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பேற்றபின், முதன் முதலாக, வருகிற ஆகஸ்டு முதல் நாள் அமைச்சர்கள் தங்கள் ஊதியத்தைப் பெற முடிவு செய்திருக்கின்றனர்.

தேர்தல் நேரத்தில் தெரிவித்தபடி ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கிடைக்கச் செய்தபின்னர்தான் ஊதியம் பெறுவது என்று ஏற்கனவே அமைச்சர்கள் முடிவு செய்திருந்தது தெரிந்ததே.

படி அரிசித் திட்டம் சென்னையிலும், கோவையிலும் செயல்படுத்தப்பட்டுவருவதுடன், படிப்படியாக மற்ற குடும்பக் கார்டு முறை உள்ள பகுதிகளிலும் செயல்படுத்தப்பட இருக்கிறது.

மக்களுக்கு வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றியதன்மூலம் கடமையாற்றிவிட்ட தமிழக அமைச்சரவை, இனி ஊதியம் பெறுவது என்று முடிவு செய்திருக்கிறது.

மேலும், கடந்த இருபது ஆண்டுக் காலமாகக் காங்கிரசு அமைச்சர்கள் வாங்கிவந்த ஊதியத்தில் பாதியைத்தான், தி. மு. க. அமைச்சர்கள் பெறப் போகின்றனர் என்பதும் நினைவு கூரத்தக்கது.

அமைச்சர்கள் ரூ. 500-க்குமேல் ஊதியம் பெறக்கூடாது என்று காந்தியார் கூறிவந்ததையும், கராச்சி காங்கிரசு தீர்மானத்தையும் மீறி காங்கிரசு அமைச்சர்கள் ரூ 1000 ஊதியமும், அதற்குமேல் பயணப் படிகளும் பெற்றுவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காந்தியார் கருத்தை—காங்கிரசுத் தீர்மானத்தை முதன் முதலில் செயல்படுத்திக் காட்டுவதும் அண்ணா அவர்கள் தலைமையில் ஆன தி. மு. க. அமைச்சரவைதான் என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கது.

கடந்த ஐந்து திங்களாக ஊதியம் பெறாமலே பணியாற்றிய அமைச்சர்கள், இப்போது தாங்கள் வாங்கப் போகும் ஊதியத்திலும் ஒரு மாத ஊதியத்தை (ரூ. 500) முதலமைச்சர் திரட்டிவரும் சென்னைத் தீ விபத்துத் துயர் தணிப்பு நிதிக்கு வழங்கிவிட முடிவு செய்துள்ளனர்.

இனவெறி வாங்கிய பலி!

அமெரிக்காவில் 3 நாட்களாக நடந்த இனக் கலவரத்தில் 33 பேர் மாண்டனர்; 500 பேர் காயமடைந்தனர்; 2,100 பேர் கைதாயினர்; 1,100 தீவைப்புகள் நடந்தன.

துப்பாக்கிகளும் இயந்திரத் துப்பாக்கிகளும் வெடித்தபோது டாங்கிகள் தெருக்களில் சுற்றின.

பாரா துருப்புகள் வந்தபோதிலும் கலவரம் ஓயவில்லை.

தி. மு. கழக வெற்றி பற்றி அறிய அமெரிக்காவில் ஆர்வம்!

இந்திய அரசு வலிவிழந்து இருப்பதாகக் கவலை!

தென்னகத்தின் இன்றைய நிலை என்ன?— செனட்டர் கேட்டறிந்தார்

வாஷிங்டன், ஜூலை 25—

தமிழகத்தில் தி. மு. கழகத்தின் வெற்றி குறித்து அமெரிக்க செனட்டர் ஒருவர், அமெரிக்க செனட் வெளிநாட்டுத் தொடர்புக் குழுவிடம் விளக்கம் கேட்டிருக்கிறார்.

சீனாவின் தாக்குதலுக்குப் பிறகு இந்தியாவின் ஆயுத பலம் பெருகியிருப்பது குறித்து இலங்கை அச்சம் கொண்டிருப்பதாக செனட்டர் அய்க்கின் என்பவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அமெரிக்கப் பாதுகாப்புத் துறைத் துணைச் செயலாளர் கூப் என்பவரிடம் மேற்படி செனட்டர் தி. மு. கழகத்தின் வெற்றி பற்றி விளக்கமாக எடுத்துரைத்து, 'தென்னிந்தியாவின் இப்பொழுதைய நிலைமை என்ன? அங்குள்ள அரசு (இந்திய அரசு) வலிவு இழந்து வருகிறதா?...குறிப்பிட்ட ஒரு நாட்டின் (இலங்கை) பிரதிநிதி எனக்குத் தந்த தகவலிலிருந்து (அது என்னவென்று வெளியிடப்படவில்லை) இதை நான் யூகிக்கிறேன்; இது குறித்து அவர்கள் மிகவும் கவலை அடைந்துள்ளனர்' என்று கேட்டிருக்கிறார்.

குறிப்பிட்ட தகவல் என்னவென்று தனக்குத் தெரியவில்லை என்று கூப் சொன்னதும், செனட்டர் அய்க்கின், தாம் வாய்மொழி மூலமாக மேற்படி விவரத்தைப் பெற்றுக்கொண்டதாகக் கூறியிருக்கிறார்.

செனட்டர் அய்க்கின் பகிரங்கமாக வெளியிட்ட குறிப்புக்களில் இலங்கையின் பெயர் குறிப்பிடப்படவில்லையெனினும், 'இந்தியாவின் அரசியல் நிலைமை குறித்து இலங்கையின் கவலை' என்ற தலைப்பு, இதற்குத் தரப்பட்டிருக்கிறது.

ஷேக் அப்துல்லா விடுதலையாவாரா?

'தற்போது இல்லை' என்கிறார் தலைமையமைச்சர்

சென்னை, ஜூலை 26—

"தற்போது ஷேக்அப்துல்லாவை விடுவிக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களால் கொடுக்கப்பட்ட—ஷேக் அப்துல்லாவை விடுவிக்க வற்புறுத்தும் கோரிக்கை மனுவுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே தலைமையமைச்சர் இக்கருத்தை வெளியிட்டார்.

"இப்படிக் கூறுவதால், ஷேக் அப்துல்லா எப்போதுமே காவலில் வைக்கப்பட்டிருப்பார் என்பதில்லை. அரசு அப்போதைக்கப்போதுள்ள நிலைமையை ஆராய்ந்துவருகிறது"

என்று, இந்திரா காந்தி மேலும் தெரிவித்துள்ளார்.

"ஷேக் அப்துல்லாவை விடுவிக்கக் கோரும் கோரிக்கை ஷேக் அப்துல்லாவிடமிருந்தே வரவேண்டும்" என்று அரசு கருதுவதாக விவரமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அதிகாரம் இருந்தால்...!

மதுவிலக்கு பற்றி மொரார்ஜி

புதுடில்லி, ஜூலை 26—

மதுவிலக்குக் கொள்கையை வலியுறுத்தி மொரார்ஜி தேசாய் கூறியதாவது:—

"எனக்கு அதிகாரம் இருந்தால் நாளைக்கே எல்லா மாநிலங்களிலும் மதுவிலக்கு அமுலுக்குக் கொண்டுவந்துவிடுவேன்.

"மதுவிலக்கினால் வருமான இழப்பு ஏற்பட்டுவிட்டது என்பதையோ, குடி அதிகமாகிவிட்டது என்பதையோ நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஆனால், அம்மாதிரி ஒரு திட்டத்தை நான் மட்டும் நிறைவேற்றிவிட முடியாது. மாநில அரசுகளும், மக்களும் இத்திட்டம் வெற்றி பெற ஒத்துழைக்க வேண்டும்."

மழையைப் பெருக்கிய இரஷ்ய விஞ்ஞானிகள்!

இரஷ்யாவில் சில இடங்களில் மழை அளவை அதிகரிப்பதில் இரஷ்ய விஞ்ஞானிகள் வெற்றி பெற்றுள்ளதாக இரஷ்யாவிலிருந்துவரும் விஞ்ஞான சஞ்சிகைகள் தெரிவித்துள்ளன.

சிவாஜி கணேசன்

நன்கொடை

சென்னை, ஜூலை 26—

தீ விபத்துத் துயர் தணிப்பு நிதிக்காக, நடிகர் சிவாஜி கணேசன் ரூ. 10,000 வழங்கியிருக்கிறார்.

சிவாஜி கணேசன் சார்பில் அவருடைய அண்ணன் திரு. வி. சி. தங்கவேல், இன்று, ரூ. 10,000-த்துக்கான 'செக்' ஒன்றை முதலமைச்சர் அண்ணா அவர்களிடம் அளித்தார்.

தீக்குளித்த தியாகிகள் குடும்பங்களுக்கு உதவி

எம்.ஜி.ஆர். ரசிகர் மன்ற நிதி பகிர்ந்தளிக்கப்படும் — புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அறிவிப்பு

சென்னை, ஜூலை 26—

"சென்ற ஆண்டு சென்னையில் எம். ஜி. ஆர். ரசிகர் மன்றச் சார்பில் கொண்டாடப்பட்ட அண்ணா பிறந்த நாள் விழா மூலம் கிடைத்த 16,000 ரூபாயும், இந்தி எதிர்ப்பின்போது உயிர்த் தியாகம் செய்தவர் குடும்பங்களுக்குக் கொடுக்கப்படும்"

என்று புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

தாய்மொழி காக்க இந்தியை எதிர்த்துத் தீக்குளித்துத் தங்கள் இன்னுயிர் ஈந்த தியாகச் செம்மல்கள் குடும்பங்கட்கும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது போலீசாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் இராசேந்திரனின் குடும்பத்துக்கும் இந்நிதி பகிர்ந்தளிக்கப்படும்.

இந்நிதியளிப்பு விழா சென்னையில் நடைபெறும். முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், தியாகிகளின் குடும்பத்தாரிடம் நிதியை வழங்குவார்கள்.

"எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றத்தினர் தம்மிடம் ஒப்படைத்துள்ள நிதியை ஒரு பயனுள்ள காரியத்துக்குப் பயன்படுத்துவேன்"

என்று, முன்பு புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்திருந்தது நினைவிருக்கலாம்.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.
திருவள்ளுவராண்டு 1998 ஆடி 11 (27—7—67) வியாழன்

தூத்துக்குடித் துறைமுகம்--கடற்படைத் தளமாக வேண்டும்

[1]

நாட்டின் தொழில் வளர்ச்சி பெருகப் பெருக, இறக்குமதி—ஏற்றுமதி வாணிபமும் கூடுதலாகும்; இதில் ஐயம் ஏற்படுவதற்கில்லை.

இந்த நடைமுறை உண்மையை அடிப்படையாகக் கொண்டுதான், 'பருவங்கள் அனைத்திலும் பயன்படுத்தக்கூடியதாகத் தூத்துக்குடித் துறைமுகத்தை மேலும் ஆழப்படுத்தி அமைத்திட வேண்டும்' எனத் திட்டமிடப்பட்டது. அத்திட்டத்தின்படி, பணியும துவக்கப்படடு நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

இந்த நிலையில், ஏற்கனவே தீர்மானித்துள்ளதுபோல், 'தூத்துக்குடித் துறைமுகத்தில் ஏற்றுமதி—இறக்குமதி கூடுதலாக முடியாது' என்ற ஐயப்பாட்டை, இந்திய அரசாங்கத்தின் நிதித் துறை கிளப்பிவிட்டது. தானே கிளப்பிவிட்ட அந்த ஐயப்பாட்டைக் காரணமாகக் காட்டி, மேற்படி திட்டத்துக்கு நிதி ஒதுக்குவதைக் குறைத்துவிட்டது நிதித்துறை.

இத்துடன், ஏற்கனவே முடிவு கட்டி இருப்பதற்கொப்ப, அத்துறைமுகத்தின் வாணிபம் பெருகக்கூடுமா கூடாதா என்பதை, தமிழக அரசுடன் தானும் இணைந்து மீண்டும் ஆராய்ந்து உண்மை காண வேண்டும் எனக் கருதவும் தொடங்கியிருக்கிறது—நிதித் துறை; இவ்வாறு கருத்தறிவித்திருக்கின்ற இதே நேரத்தில், 'தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழப்படுத்தும் முயற்சி பயனற்றது' என்றும், 'அதற்காகச் செலவிடப்படும் தொகை இலாபகரமானதாக இருக்காது' என்றும்—மறுபடியும் ஆராய்ந்து பார்க்கப் புகுவதற்கு முன்னரே—தான் விரும்புகின்ற முடிவையும் இந்திய அரசின் நிதித்துறை அறிவித்தும் உள்ளது.

'தூத்துக்குடித் துறைமுகப் பகுதியை ஆழப்படுத்தி முதல்தரமான துறைமுகமாக அமைம்கவேண்டும்' என்ற ஏற்பாட்டுக்கு எதிராக, இந்திய அரசாங்க நிதித்துறை இன்று கொண்டிருக்கின்ற கருத்தில் உண்மை இருப்பதாகவே வாதத்துக்காக ஒப்புக்கொள்ளுவோம்; திட்டத்துக்கான நிதி ஒதுக்குவதில், நிதித்துறை காட்டக்கூடிய தயக்கத்திலும் நியாயம் இருப்பதாகவே வைத்துக்கொள்ளுவோம். ஆனால், தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழப்படுத்தி முதல்தரமான துறைமுகமாக ஆக்கி அமைப்பதில்—அதிலும் உடனடியாக அமைப்பதில்—இதுவரை கோடிட்டுக் காட்டப்பட்டில்லாத சிறப்பான காரணம் ஒன்று உள்ளது.

அச்சிறப்பான காரணம், நூற்றுக்கு நூறும் உண்மையானது; இத்துணைக்கண்டத்தின் பாதுகாப்புத் தேவைக்கு என்றென்றும் இன்றியமையாதது; இத்துணைக்கண்டப் பாதுகாப்பில்—நிதி அமைச்சர் உட்பட—அக்கறை உடைய அனைவராலும், 'நியாயமானது' என ஏற்றுக்கொள்ளத்தக்கது.

இன்றுள்ள உலகச் சூழ்நிலையையும், எதிர்காலத்தில் உருவாகக்கூடிய சூழ்நிலையையும் நன்கு கூர்ந்து நோக்கவேண்டும்; அப்பொழுதுதான், பாதுகாப்புக்காக முன்னெச்சரிக்கையாக, தான் எடுத்துக்கொள்ளவேண்டிய பாதுகாப்புப் பணி என்ன என்பதை, தெள்ளத் தெளிய உணர்ந்துகொள்ள முடியும் இந்திய அரசால்!

இந்தியத் துணைக்கண்டத்தின் எல்லை, நிலப் பகுதியைவிடக் கடற் பகுதியை மிகுதியாகக் கொண்டிருக்கிறது, இதனால் நிலப் பகுதியின் வழியாக ஏற்படக்கூடிய அந்நியப் படையெடுப்பு அபாயத்தைவிட, கடல் வழியாக ஏற்படக்கூடிய படையெடுப்பு அபாயம் அதிகம். எனவே, நிலப் பகுதியின் மூலமாக ஏற்படக்கூடிய அந்நியப் படையெடுப்பை முறியடிக்கப் பல்வேறுபட்ட தரைப் படைகளைப் பெருக்குவது போன்றே, கடல் மூலமாக ஏற்படக்கூடிய படையெடுப்பைச் சந்தித்து முறியடிப்பதற்கேற்ற முறையில், கடற்படையைப் பெருக்க வேண்டியதும் கட்டாயத் தேவையாகும்.

கடல் வழியாக ஏற்படக்கூடிய படையெடுப்பு அபாயத்தை அறிந்து, அதற்கேற்பக் கப்பற் படையைப் பெருக்குவது மட்டும் போதாது; பகைவரின் வலிவைத் தெரிந்து நமது கடற்படையைப் பெருக்கும் அதேகாலத்தில், கடற்படை முழுவதையும் ஒரே கடற்பகுதியில் மட்டுமே குவித்து வைப்பதும் கூடாது. அப்படிக் குவித்துவைப்பது, சிறந்த இராணுவ முறையாகாது என்பதைக் குறிப்பிடத் தேவையில்லை.

தேவைக்கேற்ப நமது கடற்படை பெருக்கப்பட்டிருக்கத்தான் வேண்டும். மேலும் பெருக்குவதற்குத் தேவையும் இருக்கத்தான் செய்கிறது.

தேவையான அளவுக்கு, விதவிதமான போர்க் கப்பல்களைக் கொண்டதாகக் கடற்படையைத் தயார் நிலையில் வைத்திருப்பது மட்டும் போதாது; பகைவரின் தாக்குதல் ஏற்படக்கூடிய திசையை ஆராய்ந்து அறிந்து, அப்பகைவரின் கடற்படையைத் தொலைவிலேயே எதிர்த்துத் தாக்கி முறியடிப்பதற்கு வசதியாக, நமது கப்பற்படையைத் தக்க இடத்தில் நிறுத்திவைக்க வேண்டும். இவ்வாறு நிறுத்திவைப்பது, போர் முறையில் முதற்கண் சிந்திக்கத்தக்கது.

இப்பொழுது, நமது கடற்படை முழுவதும், பம்பாய்த் துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது; அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருப்பது நியாயமானதே; அதுபற்றி ஐயம் எழுவதற்கு இடமே இல்லை.

நமது நாட்டுக்கு ஏற்படக்கூடிய படையெடுப்பு அபாயம் பாகிஸ்தானிடமிருந்து மட்டுந்தான் ஏற்படக்கூடும் என்பதில்லை; செஞ்சீனப் படையெடுப்பை, இத்துணைக்கண்டம் ஏற்கனவே சந்தித்திருக்கிறது.

சீனப் படையெடுப்பு என்பது, எப்பொழுதும் நிலைத்து இருக்கின்ற அபாயம்; அது ஒரு தொடர் கதை.

நில வழியாக ஏற்பட்ட சீனப் படையெடுப்பைத்தான், இதுவரை இந்தியா சந்தித்திருக்கிறது. நில வழியாக மட்டுந்தான் சீனப் படையெடுப்பு இருந்திடக்கூடும் எனத் தீர்மானிக்கவும் முடியாது. எதிர்காலத்தில், கடல் வழியாகவும் சீனா இந்தியாவைத் தாக்க முற்படலாம். சீனாவின் அத்தகைய கடல்வழித் தாக்குதலை, இந்தியா எப்பொழுதும் எதிர்பார்க்கத்தான் வேண்டும்.

'கடல் வழியாக சீனா, இந்தியாவைத் தாக்கக்கூடும்' என்ற சிந்தனை, இந்திய அரசுக்கு ஏற்படாமல் இருந்திட முடியாது. இதுவரை அத்தகைய சிந்தனை, இந்திய அரசுக்குப் போதுமான அளவு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இதைப்பற்றி ஆராய்வதல்ல நமது நோக்கம்.

மேற்குக் கடல் பகுதியான பம்பாய் துறைமுகத்தில் குவித்து வைக்கம்பட்டிருக்கின்ற கடற்படையின் ஒரு பகுதியை, கிழக்குக் கடல் பகுதியைச் சேர்ந்த தூத்துக்குடித் துறைமுகப் பகுதியில் நிறுத்திவைக்க வேண்டும். கடற்படையை நிறுத்திவைப்பதற்காகவாவது, தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழப்படுத்தி விரிவுப்படுத்த வேண்டியது, இந்திய அரசின் தலையாய கடமையாகும்.

—கா. க.

எந்த முறையில் இந்தி இணைப்புமொழி?

"'பேச்சு மொழி' என்ற கருத்தில்கூட, இந்தியை இணைப்பு மொழியாகக் கருத முடியாது!

"1961-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி, 110 இலட்சம் பேர் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகப் படித்துள்ளனர்; 90 இலட்சம் பேர் மட்டுமே இந்தியை இரண்டாவது மொழியாகக் கற்றுள்ளனர்."

—ஏ. ஈ. டி. பாரோ

(எம்.பி.-க்கள் கல்விக் குழு அறிக்கையின்மீது மறுப்புக் குறிப்பில்)

சுதந்தரமாக நடமாடுவதற்கு தடை!

சுகர்னோவுக்குக் கட்டுப்பாடு

ஜாகர்தா, ஜூலை 26—இந்தோனேசியாவின் முன்னாள் தலைவர் சுகர்னோவுக்குச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

தலைநகரான ஜாகர்தாவிலிருந்து 40 மைல் தூரத்திலுள்ள மாளிகை ஒன்றில் வாழந்துவரும் அவர், அரசிடம் அனுமதி பெறுமல் இனிமேல் ஜாகர்தா நகருக்குள் நுழையக்கூடாது என்றும், அனுமதி பெற்று நுழைந்தாலும் அவர் விருப்பம்போல் எங்கும் போகக்கூடாது என்றும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவரது நடமாட்டத்தை அரசு கட்டுப்படுத்தும்.

பொதுமக்கள் யாரும் சுகர்னோவைப் பார்க்கக்கூடாது என்றும், அனுமதி பெற்றுத்தான் அவரைப் பார்க்க வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

கிணறு மானியத் திட்டம்---தமிழக அரசு உத்தரவு

சென்னை, ஜூலை 25—"புதிய கிணறு மானிய (திருத்த)த் திட்டத்தின்கீழ் உதவி பெறுகிறவர்கள், கிணற்று நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு ஒரு ஏக்கருக்குக் குறையாத ஆயக்கட்டில் உணவுப் பயிர்களைத்தான் பயிரிடவேண்டும்" என்று அரசு உத்தரவிட்டுள்ளது. இது முந்திய உத்தரவுக்குத் திருத்தமாகும்.

எடையைக் குறைக்கிறார் காமராசர்!

புதுடில்லி, ஜூலை 25—காங்கிரசுத் தலைவர் காமராசர் தமது எடையைக் குறைக்க விரும்புகிறாராம்.

புதுடில்லியில் பத்திரிகை நிருபர்களிடம் அளவளாவிக்கொண்டிருக்கும்போது, தமது எடையில் 5 கிலோகிராம் குறைக்க விரும்புவதாகவும், இதற்காக உணவு உண்பதில் நிபுணர் ஒருவரின் ஆலோசனையை நாடப்போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாணய மதிப்புக் குறைப்பால் ஏற்பட்ட விலைவாசி ஏற்றம்

அரசு மேற்கொண்ட தடுப்பு நடவடிக்கைகளால் பலன் உண்டா?

இன்றைய அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள்--அமைச்சர் கே. ஏ. மதியழகன் வெளியிட்ட தகவல்

சட்டமன்றத்தில் திரு. வி. கே. கோதண்டராமன் கேட்ட கேள்வியொன்றுக்கு உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அளித்த எழுத்து மூலமான பதிலில், பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்டதின் விளைவாக இன்றியமையாப் பண்டங்களின் விலைகள் உயருவதைத் தடுப்பதற்கென முந்திய அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. கடலை எண்ணெயின் விலையைக் குறைப்பதற்காகத் தென்னாற்காடு மாவட்டத்தில் வேர்க்கடலையை அரசாங்கக் கணக்கில் வாங்குவது—ஏனைய இன்றியமையாப் பண்டங்களின் விலைகள் உயராமல் இருப்பதற்காகச் சில நகர்ப்புற இடங்களில் பண்டகசாலைகளைத் துவக்குவது போன்ற நடவடிக்கைகளை முந்திய அமைச்சு மேற்கொண்டது; எனினும், இன்றியமையாப் பண்டகங்களின் விலைகள் உயராமல் தடுக்க அந்த நடவடிக்கைகள் போதுமானவைகளாக இல்லை.

முந்திய அரசு, கடலை எண்ணெய் குறித்து அரசாங்க வாணிகத்தை மேற்கொண்ட சில வாரங்களுக்குப் பிறகு கடலை எண்ணெயின் விலை சிறிது குறைந்தது; ஆனால், அரசாங்க வாணிபத்தை அரசு மேற்கொண்டதால்தான் கடலை எண்ணெய் விலைகுறைந்ததாகக் கூறிவிட முடியாது; குசராத் மாநில அரசு, கடலை எண்ணெய் ஏற்றுமதியின்மீது விதித்திருந்த தடையை நீக்கியதையும் அதற்குக் காரணமாகக் கூறலாம்.

இத்துடன், ஓரளவுக்கு வேர்க்கடலை, தென்னாற்காடு மாவட்டத்தின் முறைப்படுத்திய சந்தைகளிலிருந்து வாங்கப்பட்டது; ஆனால் இதன் விளைவாக உணவு எண்ணெய் விலைகளில் மாறுதல் ஏற்படவில்லை.

முந்திய அரசு, பருப்பு வகைகளில் அரசாங்க வாணிபத்தை மேற்கொண்டதனால், பருப்புகளின் வெளிச் சந்தை விலைகள் உயருவது ஓரளவு தடுக்கப்பட்டது.

இம்மாநிலத்தில் வாழ்க்கைச் செலவுப் புள்ளியை நிர்ணயிப்பதில், தானியங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன என்பதை யாவரும் அறிவர்.

இம்மாநிலத்தில் மக்களின் முக்கிய உணவு அரிசியாகும். முதற்கண் கொள்முதல் வேலைகளை மும்முரமாக்குவதென முடிவு செய்யப்பட்டது. கொள்முதல வேகம் அதிகரித்தவுடன் சென்னையிலும், கோவையிலும் உள்ள சட்டபூர்வமான பங்கீட்டுப் பகுதிகளில் 15—5—67 முதல் ஒரு படி அரிசி—ஒரு ரூபாய்க்கு விற்பதென முடிவு எடுக்கப்பட்டது.

சென்னையைச் சுற்றிலும் உள்ள முறைப்படியற்ற பங்கீட்டுப் பகுதிகளிலும், ஏனைய அத்தகைய பகுதிகளிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கும் திட்டம் படிப்படியாகச் செயலுக்குக் கொண்டுவரப்படும்.

அரிசியின் விலை குறைந்தால் காலப்போக்கில் ஏனைய இன்றியமையாப் பண்டங்களின் விலைகளும் குறைய வாய்ப்பு ஏற்படும் என்று கருதப்படுகிறது.

அரிசியின் விலைக்கும்—ஏனைய இன்றியமையாப் பண்டங்களின் விலைகளுக்கும் புள்ளி விவர அடிப்படையில் ஒருமைப்பாடு உள்ளது என்றும், அரிசியின் விலைக்கேற்ப ஏனைய பண்டங்களின் விலைகளிலும் மாறுதல் ஏற்படுகின்றன என்றும் பொதுவாகக் கூறலாம்.

'ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கப்படும்' என்று அறிவித்த பிறகுதான் அரிசியின் வெளிச் சந்தை விலைகள் குறைந்துள்ளன.

துவரம் பருப்பைப் பொறுத்த வரையில், நம்மிடம் ஓரளவு இருப்பு உள்ளது; அதனால் வெளிச்சந்தையில் வர்த்தகர்கள் தம் விருப்பப்படி துவரம் பருப்பு விலையை உயர்த்துவது தடுக்கப்பட்டது.

போலீசு கண்காணிப்புப் பிரிவு மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக, வெளிச் சந்தையில் அரிசி ஓரளவுக்குக் குறைந்த விலைகளில் கிடைக்கிறது; இதனால், எல்லா இடங்களிலும் அரிசியின் வெளிச் சந்தை விலைகள் குறைந்துள்ளன.

அதேசமயத்தில், ஒரு ஏக்கரும் அதற்குக் குறைந்தும் நிலம் வைத்துள்ளவர்களிடம் கொள்முதல் செய்வதில்லை என்பதால், வெளிச் சந்தைகளில் அதிக அளவுக்கு அரிசி கிடைக்க முடிந்தது.

சட்டபூர்வமான பங்கீட்டுப் பகுதிகளில் குறைந்த விலையில் அரிசி வழங்கப்படுவதால், அடுத்துள்ள மாவட்டங்களில் அதிக விலையில் அரிசி விற்பது குறைந்துள்ளது.

எல்லாவற்றையும்விட, இருப்பு நிலையைக் கண்காணித்து வருவதாலும், உபரிப் பகுதிகளிலிருந்து பற்றுக்குறைப் பகுதிகளுக்கு உரிய காலத்தில் அரிசியைக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்வதாலும், சம்பா அறுவடையின்போது கொள்முதல் வேலைகள் சரிவர நடைபெறவில்லை என்பதுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் சென்ற மூன்று மாதங்களில் கொள்முதல் வேலைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளதாலும், அரசிடம், மக்களுக்கு வழங்கப் போதுமான அரிசி இருப்பு இருக்கிறது என்னும் கருத்து உருவாகியது; இதனால், வர்த்தகர்களின் மனதில் ஒருவித மாற்றம் ஏற்பட்டது.

மேலும், மிக இன்றியமையாத கால அளவிற்குமேல் கட்டுப்பாடுகளை நீடிக்கத் தான் விரும்பவில்லை என்று அரசு அறிவித்துள்ளதனால், வர்த்தகர்கள் அரிசி இருப்புகளைப் பதுக்கி வைத்துக்கொள்ள விரும்பவில்லை.

ஒருவர் தனது சொந்த உபயோகத்திற்காக 10 படி அரிசியைத் தாராளமாக எடுத்துச் செல்ல

(4-ம் பக்கம் பார்க்க)

நிலை மாறினாலும் நினைப்பு மாறாது!

முன்னாள் ஆட்சியாளர்களின் சுபாவம் எனக்கு நிச்சயம் வராது

மக்கட்குச் சோறு போடுவதிலேயே சிந்தனையைச் செலுத்தி வருகிறோம்

முதலமைச்சர் அண்ணா தரும் நிலைமை விளக்கம்

தமிழகச் சட்டமன்றத்தில் நிதி ஒதுக்கீடு மசோதா மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கும் வகையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் மற்றொரு பகுதி (முன் இதழின் தொடர்ச்சி) இங்கு தரப்படுகிறது :—

நான்சொன்னதென்ன? நீங்கள்கூறுவதென்ன?

500 டன் அரிசி பற்றி நண்பர் கருத்திருமன் அவர்கள் சொன்னார்கள்; '500 டன் அரிசிதான் வைத்திருந்தோம் என்று சொல்கிறார்களே—நாங்கள், எண்பதாயிரம் டன் அரிசி அல்லவா வைத்திருந்தோம்—அதைக் கேளுங்கள்' என்பதாக முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவசத்சலம் அவர்கள் கேட்கச் சொன்னாரோ, என்னவோ.........

பி. ஜி. கருத்திருமன் :—"நான் கேள்வி போட்டேன்; நீங்கள் அளித்த பதிலை வைத்துக் கொண்டுதான் சொல்கிறேன்."

அண்ணா :—"'சொன்னார்' என்று சொல்லவில்லை; 'சொன்னாரோ என்னவோ' என்று ஐயுறுவதற்குக் காரணம், அவர் அதைப் பற்றி பொதுக்கூட்டத்தில் பேசுவதற்கு முன்னால் யாரும் பேசவில்லை; நீங்கள் வேண்டுமானாலும் தேதியை எடுத்துப் பாருங்கள்.

"ஓகோ, அப்படியா விஷயம்? போடு—கேள்விக்கு மேல் கேள்வியை" என்பதாக அதற்குப் பிறகுதான் கேட்க ஆரம்பித்தீர்கள்!

நான் அன்றைக்கு என்ன சொன்னேன்? நான் பேசின செய்தி வந்துள்ள பத்திரிகையை இப்போது வேண்டுமானாலும் எடுத்துப் பாருங்கள்—"சென்னை நகரத்திற்கு ஒரு நாள் தேவை எவ்வளவோ அவ்வளவுதான் — 500 டன் அரிசியைத்தான்—சென்னையில் விட்டுப்போயிருக்கிறார்கள்" என்று சொன்னேன்; 'தமிழ் நாடு முழுவதிலும்' என்று சொல்லவில்லை. திருமணங்களில் தூவப்படுகிற அரிசியைப் பொறுக்கினாலே 500 டன் கிடைக்கும். நான் சொன்னது, 'சென்னையில் ஒரு நாள் தேவைதான் இருந்தது' என்பது.

கொள்முதல் செய்வதில் நாங்கள் பெற்ற வெற்றி

நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு மூன்று மாதங்கட்கு முன்பே நீங்கள் சரியான முறையில்—சுறுசுறுப்பான முறையில் கொள்முதல் செய்யத் தவறிவிட்டீர்கள்; அதை நீங்கள் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனே கொள்முதல் திட்டத்தில் தீவிரமாகக் கவனம் செலுத்திய காரணத்தினால்தான், இப்போது, அடுத்த அறுவடை மகசூல் வருகிற வரையில்—அக்டோபர் மாதம் வரையில், எந்த இடத்திலும், 'அரிசி இல்லை' என்று சொல்லத்தக்க நிலை இல்லாத அளவுக்குக் கொள்முதலில் வெற்றிபெற்றிருக்கிறோம்!

"இதில் வெற்றி என்ன? அதிகாரிகள் போனால் கொடுக்கிறார்கள்" என்றுகூடச் சொல்வீர்கள்! கிடைக்காமல் இருந்திருந்தால் என்ன சொல்வீர்கள்?—அதைப் பார்த்துத்தான் இதைச் சொல்லவேண்டும்.

"'ஐந்து இலட்சம் டன் கொள்முதல் செய்கிறோம்' என்று வாக்களித்துவிட்டு, 'ஓர் இலட்சம் டன்னுக்கு மேல் எங்களால் கொள்முதல் செய்ய முடியாமல் போய்விட்டது' என்றால்—ஆகா—அப்போது உங்களுக்கு எவ்வளவு சுவையாக இருந்திருக்கும்?

'இந்த அரசு இன்றையத்தினம், எவ்வளவு கொள்முதல் செய்தது?" என்பார் விநாயகம்; 'ஒன்றும் கிடைக்கவில்லை' என்பார் மதியழகன்; 'அப்போதே எனக்குத் தெரியுமே' என்பார் கருத்திருமன்; 'எனக்கு ஐந்தாறு வருடங்கட்கு முன்பேயே தெரியும்' என்று ஆரம்பிப்பார் இராமமூர்த்தி! சும்மா விட்டிருப்பீர்களா எங்களை?

ஆக, இந்த அரசு இன்றைத்தினம் ஐந்து இலட்சம் டன் கொள்முதல் செய்திருக்கிறது என்றால், அதைச் சாதாரண வெற்றியாக நாங்கள் கருதவில்லை—நாங்கள் சாமானியமானவர்கள் — இது எங்களுக்குப் பெரிய வெற்றியாகத்தான் இருக்கிறது!

உங்களுக்கு வேண்டுமானால் இன்றையத் தினம் நாட்டில் உள்ள பிர்லாக்கள், டாட்டாக்கள் ஆகியவர்களுடைய பணப் பெட்டிகளில் இருப்பதையெல்லாம் கொள்முதல் செய்யக் கூடிய ஆற்றல் இருப்பதைக் கணக்குத் தெரிந்தவர்கள் பேசுகிறார்கள்; ஆகவே, அரிசிக் கொள்முதல் செய்வதில் நீங்கள் ஆச்சரிப்படமாட்டீர்கள்! ஆனால் எனக்கு ஆச்சரியம்தான்!

எங்கள் முயற்சிக்குப் பின் நிலவும் குறைபாடு

ஆறு மாதங்களுக்கு முன்பு எந்த ரேஷன் கடையை எடுத்துக் கொண்டாலும் இரண்டு மையில் நீளத்திற்குக் 'கியூ' இருந்ததை எல்லோரும் அறிவார்கள். அந்த வகையில் மக்களுக்கு ஏற்படுகிற துன்பத்தை நீக்கவேண்டும் என்பதற்காகத்தான் சென்னையை இரண்டு பகுதியாகப் பிரித்து ஒழுங்குபடுத்துகிற முறையில், 'சென்றவுடன் அரிசி கிடைக்கிற முறை'யில் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

அடிக்கடி நமது உணவு அமைச்சர் அவர்கள், இங்குள்ள கடைகளுக்கும் சரி—கோவையில் உள்ள கடைகளுக்கும் சரி—சென்று, 'கொடுக்கப்படுகிற அரிசி தரமானதாக இருக்கிறதா' என்று பார்த்து,'தரமுள்ள அரிசியே கொடுக்கப்படவேண்டும்' என்று சொல்லி வருகிறார்கள்.

அவருடைய கண்காணிப்பு—எச்சரிக்கைக்கும் மீறி மட்டமான அரிசி ஒரோரு சமயத்தில் கொடுக்கப்படுகிறது.

எங்களுடைய முயற்சிக்கும் மீறி இந்தக் குறைபாடு இருக்கிறது. உணவு அமைச்சர் அவர்கள் இதுபற்றி வெகு சுறுசுறுப்பாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்.

மாளிகைவாசிகளாக நாங்கள்இருந்திருந்தால்!

நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், பஸ் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமெனத் தோன்றி—குறைத்திருக்கிறார்கள்; 'இது ஒரு பெரிய காரியமா?' என்று நீங்கள் சொல்லலாம்.

நான் முதலிலேயே சொன்னேன்—'நாங்கள் சின்னவர்கள்; சாமானியர்கள்' என்று! 'எங்களுக்குத் தோன்றுவதால்—சாமானிய மானவர்களுக்குத்தான் அதற்கேற்றாற்போல் நாங்கள் செய்யமுடியும்' என்றும் சொன்னேன்.

நாங்கள் மாளிகவாசிகளாக இருந்து இங்கே வந்திருந்தால் வந்தவுடனே, 'ஜெட் விமானங்கள் எத்தனை ஓட்டலாம்? இரவில் வாகனங்களிலே ஏர்கண்டிஷன்—எத்தனை வண்டிகளில் வைக்கலாம்?' என்பதிலேதான் எங்கள் எண்ணம் போயிருக்கும்!

ஆனால் நாங்கள் சாதாரணமாக இருப்பதாலே—எங்களைத் தேர்ந்தெடுத்தவர்கள் சாதாரணமானவர்கள் ஆக இருப்பதாலே—பஸ் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று குறைத்திருக்கிறோம்!

நிலைதான் நினைப்புக்குக் காரணம்! சில பேர்களுக்கு நினைப்பு உயர்ந்ததால், நிலை மாறிவிடும்! ஆனால் நாங்கள் மாறாமல், எந்த நிலையில் இருந்தோமோ அந்த நிலையிலே இருப்பதில் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருக்கிறோம்.

அமைச்சர்கள்தான்-- அலைந்து திரிந்தவர்கள்தான்

நண்பர் கருத்திருமன் அவர்களுக்குத் தெரியும்—மிதிலையை ஜனகன் ஆண்டுகொண்டிருந்த நேரத்தில் அவன், தன்னை எல்லோரும் ராஜாதிராஜன்—ராஜமார்த்தாண்டன்' என்று அழைப்பதற்கு விரும்பவில்லை; 'ராஜரிஷி' என்று அழைக்கப்படுவதைத்தான் பெருமையாகக்கொண்டான். அவன் 'வேதாந்தி' என்று அழைக்கப்படுவதில்தான்—'வேந்தன்' என்று அழைக்கப்படுவதை விட—அதிகமான பெருமை கொண்டான்.

நாங்கள், 'அமைச்சர்கள்' என்ற உணர்வைவிட 'அலைந்து திரிந்தவர்கள்' என்ற உணர்வைத்தான் கொண்டிருக்கிறோம்!

"நாட்டிலே 100-க்கு 80 பேர்கள் கஷ்டப்படுகிறார்கள்; அவர்களுக்கு ஒரு கவளச் சோறு கிடைக்காமல் இருக்கிறதே—அவர்களுக்கு என்ன செய்யலாம்" என்பதிலேதான் எங்கள் நினைப்பு சென்று கொண்டிருக்கிறது!

திரு. கருத்திருமன் அவர்கள் கதை சொல்வதாலே, எனக்கும் ஒரு கதை சொல்ல வேண்டுமென்ற நினைப்பு வருகிறது. எனக்கு, கதை சொல்லக்கூடிய அந்த வயதுதான்: ஆனால், அவர்களுக்கு அந்த வயது இல்லை என்று நினைக்கிறேன்.

புதிய நிலைக்கு வந்தோம்-- இருந்த நிலையை மறந்தோமா?

கோபுரவாசலில் பிச்சையெடுத்துக் கொண்டிருந்த ஒருவன்—மோட்டார் வண்டியில், வந்த ஒருவன் மோட்டார் வண்டியிலிருந்து இறங்கிக் கோயிலுக்கு வந்துவிட்டுப் போனதைப் பார்த்துவிட்டு—'ஆண்டவனே! என்னை இந்த நிலையில் படைத்துவிட்டு அவனை அந்த நிலையில் படைத்து அதை நான் பார்க்கக்கூடிய நிலையில் என்னை வைத்திருக்கிறாயே—இது உனக்கு அடுக்குமா?' என்று சொன்னானாம்; திடீரென்று அவன் பணக்காரன் ஆகிவிட்ட பிறகு, மோட்டார் வண்டியில் கோயிலுக்கு வரும் பொழுது அங்கே உட்கார்ந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்த பஞ்சைகளைப் பார்த்த நேரத்தில், 'ஆண்டவனே! என்னைப் பணக்காரனாக ஆக்கி இந்த நிலையில் வைத்துவிட்டு, பஞ்சைகளைப் பார்க்கும்படியும் செய்துவிட்டாயே' என்றானாம்! இது மாதிரி கதை எழுதியிருக்கிறார்கள்.

நாங்கள் புதிய நிலைக்கு வந்தோமே தவிர, நாங்கள் இருந்த நிலையை மாற்றிக் கொள்ளவே இல்லை! 'அந்த நினைப்பு மாறும்' என்று ஒரு துளி எனக்குத் தோன்றினாலும், அடுத்த கணம் இந்தப் பதவியில் இருப்பதாக நாங்கள் உத்தேசிக்கவில்லை! அந்த நிலையை உணர்ந்திருப்பதால்தான் நாங்கள் பஸ் கட்டணத்தைக் குறைத்தோம்!

அப்படிப் பேசத்தான் உங்களுக்குத் தோன்றும்!

புஞ்சை நிலங்களுக்கு வரியைக் குறைத்திருக்கிறோம். 'புஞ்சை நிலங்களுக்கு மாத்திரம் குறைத்தார்கள்; நஞ்சைக்குக் குறைக்கவில்லையே' என்றார்கள்.

பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்தில், பிருமானந்த ரெட்டியார் காங்கிரசுக்காரராக இருக்கிறார்; 'சென்னையிலே காங்கிரசு ஆட்சியில்லை' என்றால், 'இங்கே இல்லாவிட்டால் என்ன? ஆந்திரத்திலே நாங்கள்தானே?' என்று பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடியவகையில் காங்கிரசு அரசாங்கம் அங்கு இருக்கிறது.

ஆந்திர மாநிலத்தில், புஞ்சைக்குத்தான் வரியை நீக்கியிருக்கிறார்கள்—நஞ்சைக்கு அல்ல!

இன்னும் பல மாநிலங்களிலேகூட 'நில வரியை நீக்கலாம்' என்று திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர, அவர்கள் உடனடியாக எடுத்துவிடவில்லை!

'புஞ்சைக்குச் செய்தீர்கள் — நஞ்சைக்குச் செய்யவில்லையே' என்பதை நியாயமற்றதாகக் கருத வேண்டாம்.

திருமண வீட்டில் சாப்பிட்டுவிட்டு கையைக் கழுவி துடைத்துக் கொள்ளுகின்ற நேரத்தில், 'சாப்பாடு எப்படி?' என்றால், 'இது என்ன—மோர்க் குழம்பில் பூசணிக்காய்தான் போட்டான்; அந்தத் திருமணத்திலே அன்றைக்கு......'என்று பேசத்தான் தோன்றும்.

ஆகவே 20 ஆண்டுகளாக 'ராஜபோஜனம்' சாப்பிட்டவர்கள் நீங்கள்! உங்களுக்கு நான் போடுவது ருசிக்காது!

'ஒன்றுமே இல்லாதவர்களுக்கு ஒரு கவளச் சோறு கொடுக்கலாம்' என்ற முறையிலேதான் புஞ்சை நிலத்திற்கு வரி நீக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுடைய சுபாவம் எனக்கு ஏற்படாது!

'செய்வது சரி; எங்கே இருந்து எடுக்கவேண்டுமோ அங்கே இருந்தல்லவா எடுக்கவேண்டும்?' என்று திரு. கருத்திருமன் சொல்வார். அதனால்தான், விவசாயத் துறை வருவாயிலிருந்து எடுக்கிறோம்.

பிறகு அவர், 'விவசாயிகளுக்குக் கஷ்டமான நிலையை உண்டாக்கிவிட்டால், நான் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன்' என்று சொன்னார்; நான் எல்லோருடைய கருத்தையும் ஒட்டிப் போக வேண்டுமென்ற முறையிலே, 'கம்பவுண்டிங் முறையை அடியோடு எடுத்துவிட வேண்டும்' என்று எடுத்துச் சொன்னார் — நான் இணங்கினேன்.

'பல பிரச்சினைகள் விவாதிப்பதற்கு இதிலே இருக்கின்றன' என்று சொன்னார்கள்; நான், 'பொறுக்குக் குழுவிற்கு விடலாம்' என்று சொன்னேன்.

நண்பர் கருத்திருமன் அவர்களுடைய கட்சி ஆட்சியிலிருந்த பொழுது—எதிர்க் கட்சியினர் இவைபோன்று எடுத்துச் சொன்னபொழுது— ஒரு இணக்கம் காட்டியிருப்பார்களா? உங்களோடு சேர்ந்து பழகியும், எனக்கு அந்தச் சுபாவம் இல்லாமல் இருந்ததே—அந்த அளவில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி.

வேடிக்கைப் பேச்சுக்குப் பயன்படுமே தவிர...!

1,500 ருபாய் வருமானம் உள்ளவர்களுக்குச் சம்பளச் சலுகைகள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இதற்குக்கூட அவர்கள் சொல்லலாம்—'நாங்கள் வந்தால் என்ன என்ன செய்வோம் தெரியுமா?' என்று!

வேடிக்கையாக வாலிபர்கள் பேசிக்கொள்வார்கள் — 'நான் ஒரு மணி நேரத்திற்கு முன்னால் பிறந்திருந்தால் ஐதராபாத் நிஜாம் ஆகியிருப்பேன்' என்று! ஆனால், வரவில்லையே என்ன செய்வான்!

நீங்கள் வந்திருந்தால், நிச்சயமாகச் செய்து இருக்கமாட்டீர்கள் என்பதை நான், ஆதாரங்களோடு சொல்ல முடியும்.

இந்த அரசுக்கு—திட்டக் குழு சொல்லியிருப்பது என்னவென்றால், 'நில வரியை அடியோடு நீக்கக்கூடாது' என்பதுதான்!

அது மட்டுமல்ல; நில வரி நீக்கத்தைப் பற்றிப் பெறப்பட்ட கெய்வார் அறிக்கையில், 'நில வரியை நீக்கிவிட்டுத் தண்ணீர் வரியை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி வருமானால் ஒரு ரூபாய் நில வரியை நீக்கிவிட்டு, ஒன்பது ரூபாய் தண்ணீர் வரியை வசூலிக்கின்ற நிலைதான் ஏற்படும்! அப்படிச் செய்ய வேண்டுமென்று சொன்னால் எல்லாக் கட்சிக்காரர்களிடமும் சொல்லி—அவர்களைக் கேட்டுக் கொண்டு—அதன்மூலம் எவ்வளவு பணம் வரும்' என்பதை நான் ஒரு வருடம் வேண்டுமானால் நடத்திக்காட்டுகிறேன்.

நஞ்சைக்கு ஒரு வரி—பவானிக்கு ஒரு வரி மணிமுத்தாற்றுக்கு ஒரு வரி—என்றெல்லாம் அறிக்கையிலே பலவிதமாகக் கொடுத்திருக்கிறார்கள்.

சமூக நீதி அடிப்படையில் இலவசக் கல்வி!

புஞ்சைக்கு வரி நீக்கியதோடுமட்டுமல்லாமல், புகுமுக வகுப்புக் கல்வியிலே சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரேயடியாக, 'இலவசக் கல்வி' என்று கொடுக்கவில்லை; காரணம் பணம் இல்லாததுமட்டுமல்ல—அதற்குப் பின்னாலே ஒரு சமூக நீதி அடங்கியிருக்கிறது.

அரசு செய்கிற சலுகைகள் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும் என்பதை நாங்கள் ஒத்துக் கொள்ளவில்லை; 'வசதி படைத்தவர்கள் செலுத்தவேண்டும்—வசதியில்லாதவர்களுக்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்வேண்டும்—அதற்குப் பெயர்தான் சமூக நீதி!

எல்லோருக்கும் ஒரே மாதிரி —ரூ. 1,000, ரூ. 2,000 வருமானம் உள்ளவர்களுக்கும் அதுதான்—ரூ. 5,000, 10,000 வருமானம் உள்ள்வர்களுக்கும் அதுதான்—டாக்டர்கள் பிள்ளைகளுக்கும், நண்பர் கருத்திருமன் வீட்டுப் பிள்ளைகளுக்கும்கூட இலவசக்

(4-ம் பக்கம் பார்க்க)

நிலை மாறினாலும் நினைப்பு மாறுது!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி என்று கொடுத்தால், அவர்கள் வைத்திருக்கிற பணத்தின் அருமையை எனக்கு மதிக்கத் தெரியவில்லை என்று பொருள்; அதனால்தான் அப்படிச் செய்திருக்கிறோம்.

ரூ. 1,500-க்கு குறைவாக வருமானம் உள்ளவர்கள் பிள்ளைகளுக்குச் சம்பளச் சலுகையை புகுமுக வகுப்பிலே கொடுத்திருக்கிறோம். என். ஜி. ஓ.-க்களுடைய பிள்ளைகளுக்கெல்லாம் — அவர்கள் எந்தச் சம்பளம் சம்பாதித்தாலும் சரி புகுமுக வகுப்பிலே சலுகைகள் இருக்கவேண்டும் என்று நாங்கள் தெரிவித்திருக்கிறோம். இந்த விதத்திலே கூடுமானவரையில் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

ஏமாற்றிக்கொள்ள என்னல் இயலாது!

உணவு உற்பத்தியைப் பெருக்கினலன்றி, ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதன்மூலம் காரியம் நடைபெறுது என்பதை அறிந்திருக்கிறோம்.

நாம் விலையைக் குறைத்து விற்கிறோமே தவிர, விலை என்னவோ குறையவில்லை!

இந்த இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை நான் உணருகிறேன்; அதனால்தான் அதற்கு உதவித் தொகை தரப்படுகிறது.

உற்பத்தியாளர்களும் கஷ்டப்படாமல் வாங்கி உண்பவர்களும் கஷ்டப்படாமல் இருக்க, இடையே அரசு, பளுவை ஏற்றுக்கொண்டிருக்கிறது! அதனலே, விலை இறங்கிவிட்டது' என்று என்னை நான் ஏமாற்றிக் கொள்ளவில்லை - மற்றவர்களுக்கும் சொல்லவில்லை!

உணவு நெருக்கடி தீர வளர்ச்சித் திட்டங்கள்

உணவு உற்பத்தி பெருகினல்தான் உணவு நெருக்கடி தீருமென்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிருர்கள்.

இப்போது, 3-4 மாதங்களில் நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கின்ற பெரிய முயற்சியின் காரணமாக உங்களுக்கு நான் தைரியத்தோடும், மகிழ்ச்சியோடும் தெரிவித்துக்கொள்ள முடியும்—அக்டோபர் மாதத்தில் இந்த நாட்டில் உணவு நெருக்கடி இல்லையென்று சொல்லத்தக்க அளவுக்கு நல்லவிதத்தில் விளைச்சல் கிடைக்கும். அதற்குத் தேவையான முறையில் விவசாய வளர்ச்சித் திட்டங்கள் பூர்த்தியாயிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேட்டூர் நல்ல அளவுக்கு நிரம்பி இருக்கிறது; குந்தா பகுதியில் நல்ல அளவுக்கு மழை பெய்து மின்சாரத் திட்டமும் தங்கு தடையின்றி நடக்கத்தக்க அளவுக்கும், நீர்ப் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்கத்தக்க அளவுக்கும் நிலைமை இருக்கிறது.

கோவை மாவட்டத்தில் உள்ள பவானிசாகரிலும் வெள்ளம் வந்து நிரம்பி தண்ணீர் இருக்கிறது! எந்தப் பக்கத்திலும் பச்சைப் பசேல் என்ற காட்சி தெரியத்தக்கவிதத்தில் இருக்கிறது.

இந்த நிலையில், முன்பு தஞ்சை மாவட்டத்தில் ஒரு போகமாக இருந்த இடத்தில் இரண்டு போகமாகவும், இரண்டு போகமாக இருந்த இடத்தில் மூன்று போகமாகவும், சாதாரண நெல் இருந்த இடத்தில் உயர்ந்த ரகங்களையும் போட்டு நல்லவிதத்தில் விவசாய வளர்ச்சிக்காக வேளாண்மைத்துறை அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள் சிறப்பான முறையில் பணி செய்துகொண்டு வருகிருர்கள்.

நல்லதோர் நம்பிக்கை நம்மிடை உண்டு

தஞ்சை மாவட்டத்தில் ஒரு பகுதிக்குப் போயிருந்தேன்; அங்கு வந்திருந்தவர்களிலே ஆங்கிலம் படித்த மிராசுதார் சொன்னர்—'இப்போது இருப்பதுபோன்ற மகிழ்ச்சியோடு எப்போதும் இருந்ததில்லை' என்று; 'என்ன ஐயா?' என்று கேட்டேன்; போதுமான அளவு தண்ணீர் கிடைத்துவிட்டது; பொறுக்கு விதைகள் தாராளமாகக்கிடைக்கின்றன; உரத்தைப் பொறுத்தவரை தங்குதடையில்லாமல் கிடைப்பதற்கான உத்தரவாதம் கிடைத்துவிட்டது' என்றுசொன்னர்; 'இன்னும் ஒன்றையும் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்றேன்—'பூச்சி மருந்துக்காக உதவித் தொகை கொடுத்து வருகிறோம்; அதிலே 25 சதவிகித நெல் விவசாயத்திற்கும் 50 சதவிகிதம் பணப் பயிர்களுக்கும் கொடுத்து வந்தோம்; அதை மாற்றி, நெல் விவசாயப் பயிர்களுக்குத் தரப்படுகின்ற பூச்சி மருந்துகளுக்கான உதவித் தொகையை 35 சதவிகிதமாக இருக்கவேண்டும் என்று ஏற்பாடு பெய்திருக்கிறோம்' என்றும் அவருக்குச் சொன்னேன்; 'அப்படியானல் ரொம்பசந்தோஷம்' என்று சொல்லிவிட்டுக் கடைசியில் அவர், 'கருத்திருமன் பேச்சை'எடுத்தார்—'விளைச்சல் பற்றிப் பயமில்லை; வாங்கிக் கொள்வீர்களா?' என்று கேட்டார்.

இப்போதும், நாம் போய் வாங்கும் போது ஒரு விலை—அவர்கள் விற்கிறபோது ஒரு விலை—அவர்களுக்கே இது தெரியும். பயிர் வருவதற்கு முன்னலேயே கேட்கிருர்கள் — அந்த அளவுக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது – வளமாக இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மனம் நோகச் செய்யும் எண்ணம் கடுகளவும் இல்லை!

இதனுடைய இணைப்பாகச் சொல்ல விரும்புகிறேன்—விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தினுடைய விளைவை உற்பத்தி செய்து வைத்துக் கொண்டு, 'போதுமான வருவாய் கிடைக்கவில்லை' என்னும் படியான நிலைமையில் அவர்களை விட்டுவைக்கமாட்டோம் என்பதை மட்டும் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தகுந்த உதவிகள், தகுந்த நேரத்தில் நிச்சயமாக இந்த அரசு செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

'உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தார்' — நாட்டினுடைய உயிர், வாழ்வு உற்பத்தி செய்யக்கூடியவர்களிடந்தான் இருக்கிறது. அவர்களை மனம் நோகச் செய்ய வேண்டுமென்ற எண்ணம், கடுகளவுகூட எனக்குக் கிடையாது."

ஸ்டேட் பாங்கி மேற்பார்வை ஊழியர் கோரிக்கை

சென்னை, ஜூலை 25—அனைத்திந்திய ஸ்டேட் பாங்கி மேற்பார்வையிடும் ஊழியர் சங்கக் கூட்டமைப்பின் செயற்குழுக் கூட்டம் ஜூலை 20, 21 ஆகிய நாட்களில் சென்னையில் கூடியது.

ஊதிய விகிதங்களை மாற்றியமைக்கவேண்டும்; அகவிலைப் படியை வாழ்க்கைச் செலவுப் புள்ளியுடன் இணைக்கவேண்டும்—என்னும் தங்கள் கோரிக்கைகளைக் குறித்து ஆகஸ்டு 8-ஆம் நாளுக்குள் நிர்வாகம் பேச்சுவார்த்தை நடத்த முன்வராவிடில் செப்டம்பர் முதல் நாள் நாடு முழுவதிலும் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்வதென்றும் அதன் பிறகு தேவைப்பட்டால் பொது வேலை நிறுத்தமும் செய்வதென்றும்முடிவு செய்யப்பட்டது.

இந்தப் பிரச்சினைகளில் அரசு தலையிட்டு, கோரிக்கைகளைப் பரிசீலிக்கக் கமிஷன் அல்லது டிரிப்யூனல் நியமிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

28--7--67

வத்தலக்குண்டு

தி. மு. க. சார்பில் வானெலித் திடலில்; தலைவர்: வெ இராமன்; பேசுவோர்: கா. இராசா முகமது பி.ஏ.பி.எல்., தமிழ் மாறன், ஆ. முனியாண்டி எம்.எல்.ஏ., பொன். முத்துராமலிங்கம் பி.ஏ.பி.எல்.

பிச்சிவாக்கம்

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு சி.வி.எம். அண்ணமலை எம்.எல்.ஏ., எஸ். கே. சம்பந்தம் பி.ஏ., எம்.பி., ஆகியோருக்குப் பாராட்டு; பாராட்டு வழங்குவோர்: டி. சீனிவாசன், சி. ஆறுமுகம், கே. குப்புசாமி, என்.எஸ். பலராமன், ஜி. எல்லப்பன், ஏ. சி. இராமநாதன் மற்றும் பலர்.

29--7--67

மதுரை 7-வது வட்டம்

தியாகராயர் படிப்பக 12-வது ஆண்டுவிழா; இரவு 7-மணிக்கு; தலைவர்: தெ. அய்யம்பெருமாள்; பேசுவோர்: வெ. கண்ணன், நெல்லை எஸ். மாறன், கு. திருப்பதி பி.ஏ.பி.எல்., பி.அறிவழகன்.

கலவை

தி. மு. க. சார்பில் பாராட்டு–நன்றியறிவிப்பு; மாலை7-மணிக்கு மந்தைவெளி மைதானத்தில்; தலைவர்: பா. சீராமுலு; பாராட்டுப் பெறுவோர்: கோ. விசுவநாதன் எம்.ஏ.பி.எல்., எம்.பி., நா. வீராசாமி எம்.எல்.ஏ., பாராட்டுவோர்: அமைச்சர் செ. மாதவன், அரங்கநாதன் பி.ஏ. பி.எல்., எம்.எல்.ஏ., எம். ஏ. கபூர் எம்.எல்.ஏ., வேலம் மு. தம்பிதாசன்.

புராணசிங்குபாளையம்

தி. மு. க. சார்பில் பாராட்டுக் கூட்டம்; இரவு 7-மணிக்கு துரோபதையம்மன் கோயில் திடலில்; தலைவர்: கே. இராமகிருட்டினன்; பாராட்டு வாசிப்பவர்: கே. கோதண்டபாணி; பாராட்டு பெறுவோர்: அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, எம். இராமன் எம்.எல்.ஏ., பாராட்டு வழங்குவோர்: காஞ்சி கல்யாணசுந்தரம், மா.கி. தசரதன் எம்.ஏ., ஏ. கிருட்டினமூர்த்தி, வ. சாமிக்கண்ணு, ச. தனஞ்செயன்.

பதுக்கல்--கள்ளச்சந்தை வியாபாரிகள்மீது நடவடிக்கை

தமிழகத்தில் 2,342 பேர் கைதாயினர்

7—6—66 முதல் 25—5—67 வரையில், பதுக்கிவைத்தல்—கள்ளக் கடத்தல்—கறுப்புச் சந்தை வாணிபம் ஆகிய குற்றங்களுக்காக 2,342 பேர் கைது செய்யப்பட்டனர்; 2,196 வழக்குகள் நீதிமன்றங்களில் தொடரப்பட்டன.

கைது செய்யப்பட்ட 2,342 பேர் குறித்த விவரம் வருமாறு:—

சென்னை	186
செங்கற்பட்டு	255
தென் ஆற்காடு	88
தஞ்சாவூர்	65
திருச்சிராப்பள்ளி	186
மதுரை	213
இராமநாதபுரம்	127
திருநெல்வேலி	115
கன்னியாகுமரி	428
கோயம்புத்தூர்	103
நீலகிரி	3
சேலம்	44
தர்மபுரி	111
வட ஆற்காடு	126
இரயில்வே போலீசு	292

இத்தகவல், உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்களால் சட்டமன்றத்தில் வெளியிடப்பட்டதாகும்.

கிளம்பிவிட்டார்கள் இந்தி வெறியர்கள்

ஆட்சி மொழிச் சட்டத் திருத்தம் தேச விரோதமாம்

புதுடில்லி, ஜூலை 26—"ஆட்சிமொழித் திருத்த மசோதாவைக் கொண்டுவர வேண்டாம்" என்று, எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 50 பேர், தலைமையமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளனராம்.

ஒரு மாநிலம் விரும்பினலும், அது விரும்பும் காலம் வரையில் மத்திய அரசில் ஆங்கிலம் ஓர் ஆட்சி மொழியாக இப்போதுள்ளபடியே இருக்கும் என்ற நிலையில் திருத்த மசோதா அமைந்திருக்கிறதாம்; இந்த ஒருவிதியே எல்லா மக்களாட்சிக் கொள்கைகளுக்கும் விரோதமானதாகுமாம்; இதன்படி ஓர் இலட்சம் மக்கள் தொகையுள்ள மாநிலம் நாட்டிலுள்ள மற்ற 50 கோடி மக்களையும், தான் விரும்புகிறபடி நடக்கச் செய்யக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிடுமாம்; நேரு கொடுத்த வாக்குறுதிப்படி ஒரு சில இலட்சம் மக்களின் விருப்பத்தை மற்றெல்லா மக்களிமீதும் திணிக்கும் நிலை ஏற்படுமாம்; இப்படிச் செய்வது தேசவிரோதமாம்; அரசியல் சட்டத்தின் நோக்கத்துக்கும் முரணனதாம்.

அவர்கள், தங்கள் கடிதத்தில் இவ்வாறு கருத்தறிவித்திருக்கின்றனர்.

நாணய மதிப்புக்....

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

லாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால், மக்கள் தங்கள் தேவைகளுக்கு உள்ளூர் சந்தைகளையே நம்ப வேண்டியிராத நிலை ஏற்பட்டது; இதனல், அரிசி இருப்புக்களைப் பதுக்குவதால் தங்களுக்கு ஆதாயம் கிடைக்காது என்று வர்த்தகர்கள் உணர்ந்தனர்.

எனினும், அரிசி விலை குறைந்ததால், ஏனைய இன்றியமையாப் பண்டங்களின் விலைகளும் குறையும் என்று எதிர்பார்த்தது போல் நடக்கவில்லை; 'வர்த்தகர்களிடமிருந்து ஒத்துழைப்புக்கிடைக்காததேஅதற்குக்காரணம். எனவே ஏனைய, இன்றியமையாப் பண்டங்களின் விலைகளைக் குறைக்க பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது குறித்து அரசு ஆலோசித்துவருகிறது. இதற்கென வருவாய்த்துறைக் கழகத்தின் இரண்டாவது உறுப்பினர், அத்தகைய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை ஒன்றை அனுப்பும் படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அந்த அறிக்கை கிடைத்துள்ளது; அது குறித்து மும்முரமாக ஆலோசித்தும் வருகிறோம்.

இம்மாநிலத்திற்கு வெளியில் வேர்க்கடலையும், கரும்பும் வெல்லமும் ஏற்றுமதி செய்யப்படுவதற்குத் தடை விதிப்பது குறித்து ஆலோசித்து வருகிறோம்; அப்போதுதான், இம் மாநிலத்திலுள்ள வெளிச்சந்தைகளில் மிகுதியான அளவில் அவை கிடைத்து, அவற்றின் விலைகள் குறைவதற்கு வழி ஏற்படும்.

இம்மாநிலத்திலுள்ள எந்தப் பகுதியிலும் பருப்பு வகைகள் பற்றாக்குறை இராமல் செய்யவும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம்; இது குறித்து இந்திய அரசின் கருத்தை அறிய முற்பட்டுள்ளோம்.

நகரில் உள்ள அரசு பங்கீட்டுக் கடைகளும், மகளிர் பயன் கொள்வோர் பண்டகச்சாலைகளும் குழந்தைகள் உணவு போன்ற பொருள்களின் விலைகள் உயராமல் இருக்கப் பேருதவியாக இருக்கின்றன; இப்பண்டங்களை அவை, நியாயமான விலைகளில் மக்களுக்கு வழங்கின."

காவேரி ஆலையைத் திறக்க தமிழக அரசு நடவடிக்கை

பாதிக்கப்பட்ட தொழிலாளருக்கு தி.மு.க. தலைமை நிலையம் உதவி

சென்னை, ஜூலை 26—வேலையிழந்து தவிக்கும் காவேரி நூற்பாலைத் தொழிலாளர்களின் நிவாரண நிதிக்காக தி. மு. க. தலைமை நிலையம் ரூ. 500 நன்கொடை வழங்கியிருக்கிறது.

நேற்று காலை 11-மணிக்கு தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் அண்ணா அவர்களையும், பொதுப் பணித்துறை அமைச்சர் கருணாநிதி அவர்களையும், திருச்சி மாவட்ட ஆலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க காவேரி நகர்க் கிளையின் தலைவர் அ. தியாகராசன், க. சிங்கமுத்து, லெ. ஆதியப்பன், மற்றும் அ. சதாசிவம் ஆகியோர் சந்தித்து, அவதிப்படும் தொழிலாளர்களின் நிலைமைகளை விளக்கினர்கள்; திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் அன்பில் தர்மலிங்கமும் உடனிருந்தார்.

உடனடியாக அண்ணா அவர்கள், கழகத் தொழிலாளர் நிவாரண நிதிக்காக தி. மு. க. தலைமை நிலையத்திலிருந்து ரூ. 500 தரும்படி கூறினர்.

தொடர்ந்து அண்ணா அவர்கள் இட்ட உத்தரவின் பேரில் அ. தியாகராசனும் மற்ற தோழர்களும் தொழில்துறை ஆணையாளரை அவருடைய அலுவலகத்தில் சந்தித்தனர். தொழிலாளர்களுக்கு ஒரு வாரத்திற்குள் பண்டகசாலை மூலம் ரூ. 12,000 பெறுமானமுள்ள அரிசியை ஆலை முதலாளி வழங்குவதென்றும் தொடர்ந்து தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் ஊதியத்தைப் பகுதி பகுதியாகத் தந்துவிடுவதென்றும் ஆணையாளர் ஏற்பாடு செய்தார்.

அத்துடன் பிராவிடண்ட்பண்டு கமிஷனருடன் தொடர்புகொண்டு தொழிலாளர்களுக்குக் கடன் வசதிக்கான ஏற்பாடுகளைச் செய்து முடித்திருக்கிருர்.

இரண்டு வாரங்களுக்குள் ஆலை நிச்சயமாக ஓடத் துவங்கும் என்றும் இதுபற்றி எல்லாச் சங்கங்களையும் கூட்டி ஒரு திட்டத்தைத் தயாரிப்பேன் என்றும் தொழில் துறை ஆணையாளர் அ. தியாகராசனிடம் உறுதியளித்தார்.

• குறிப்பிட்ட நாட்களில் ஊதியம் தராத முதலாளிமீது அரசு நடவடிக்கை எடுப்பதும் உறுதி செய்யப்பட்டது.

துயர்தணிப்பு நிதி

படத் துறையாளர்கள் கூட்டம்

அமைச்சர் சத்தியவாணிமுத்து கூட்டுகிருர்

சென்னை, ஜூலை 27—சென்னைத் தீ விபத்துத் துயர் தணிப்பு நிதி சேர்ப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆய்ந்தறிய படத் தயாரிப்பாளர்கள் — நடிகர்கள் — பட வெளியீட்டாளர்கள் கொண்ட கூட்டம் ஒன்றை, 28—7—67 வெள்ளி காலை 11-மணிக்கு பாலர் அரங்கில் அமைச்சர் சத்தியவாணிமுத்து கூட்டுகிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அறிவகம் அச்சகத்தில் (24, குயிலப்பா ஏழை செட்டித் தெரு, சென்னை) அச்சிடப்பட்டது.